மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,19,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

அடுத்த கோரிக்கை எண். 57-க்கு திருவாளர்கள் வி. ரகுராமன், ரெ. வி. சவுந்திரராஜன் சி. கோவிந்தராசன், மு. ஆறுமுகம் ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

"மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,57,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

324. மகளிர்க்கான அரசு பல்தொழிற் பயிற்சிப் பள்ளியில் ரொட்டி தயாரித்தல், தின்பண்டம் செய்தலில் பட்டைய வகுப்பிற்கென அனுமதியளிக்கப் பெற்றுள்ள முதுநிலை ஆசிரியர், செய்முறை விளக்குநர், ரொட்டி தயாரிப்பவர் ஆகிய பதவிகளை தேர்வாணை கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பது குறித்த

[1978 மார்ச் 27

19-1-1978 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-) 83 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

325. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1974-75 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகைக் குறிப்பும் ஆதாய—விரயக் கணக்கும் [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 58/1962)-31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*169. கோரிக்கை எண். 8 தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978—79 (ஆங்கிலம், தமிழ்).

*170. மீன்வளம் பற்றிய 1978-79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

*171. கூட்டுறவுத் துறையின் 1978-79 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*172. கோரிக்கை எண் 6.—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*173. கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

174. உடுக்குறியிடாத வினா—விடைப் பட்டியல் (296 முதல் 335 வரை).

இணைப்பு I

[. . . 39-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 681-க்கான விடையைக் காண்க.]

(அ) & (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1-6-1971 முதல் ஏற்படுத்தப்பட்டது. வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் அமைப்பு முறைப்படி, வேளாண்மைக் கல்லூரி மட்டு மல்லாது கால்நடை மருத்துவம், மனையியல், மீன்வளம், வனஇயல் கல்லூரிகளும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அடங்கலாம்.

* 23-3-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.